# தமிழகம் கியூபெக் கலாச்சாரச்சங்கம்

# தமிழ்ச் சிட்டுக்கள்

## ஆவணி 2023 மின்னிதழ்

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
-பாரதியார்

# எங்களை பற்றி ...

தமிழகம் கியூபெக் கலாச்சாரச் சங்கம் ஒரு இலாப நோக்கற்ற, கட்சி சார்பற்ற தமிழ் சமூக அமைப்பாகும், இது கியூபெக்கிலுள்ள தமிழ்நாட்டு, இந்தியத் தமிழர்களிடையே தமிழ் கலாச்சார விழுமியங்களை மேம்படுத்துதல் மற்றும் வளப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டது . தமிழகம் கியூபெக் 2003 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு பதிவு செய்யப்பட்ட இலாப நோக்கமற்ற தன்னார்வ தொண்டு நிறுவனம்.

தமிழகம் கியூபெக் கலாச்சாரச் சங்கம் முனெட்டுக்கும் முக்கிய நிகழ்வுகள் தீபாவளி கொண்டாட்டம், தமிழ் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள், கோடைக்கால குடும்ப உல்லாசப் பயணம் மற்றும் ஒன்றுகூடல்.கியூபெக் மற்றும் மொன்றியலில் உள்ள தமிழ் பேசும் மக்களின் கலாச்சார மற்றும் சமூக தொடர்புகளுக்கு தமிழகம் கியூபெக் ஒரு இணைப்பை வழங்குகிறது, குறிப்பாக நுண்கலைகள், இலக்கியம், மொழி மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. நிறம், மதம், இனம், மதம், பாலினம் அல்லது தேசிய வம்சாவளியைப் பொருட்படுத்தாமல் ஆர்வமுள்ள அனைத்து நபர்களிடையே தமிழ்நாடு, இந்தியாவின் கலாச்சாரம் பற்றிய நல்லெண்ணம், புரிதல் மற்றும் பாராட்டுதலை ஊக்குவிக்க இந்த அமைப்பு முயல்கிறது.

தமிழகம் கியூபெக் உள்ளூர் கலைஞர்களை குறிப்பாக இளம் தலைமுறையினரின் திறமைகளை ஊக்குவிக்கிறது. மேலும், தமிழகம் கியூபெக் தங்களது சகோதர அமைப்பான கியூபெக் தமிழ் கல்வி நிலையம் மூலம் தமிழ் சமூகத்தில் உள்ள குழந்தைகளுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்க வகுப்புகளை நடத்தி வருகிறது.


சொந்த மண்ணை விட்டு கல்வி , பொருளாதாரம் போன்ற தேவைகளுக்காக புலம்பெயந்த தமிழ் நாட்டு தமிழ் மக்களை ஒன்றிணைத்து சமூகமாக ஒற்றுமையுடன் தமிழனமாகி தலை நிமிர வேண்டும் என்ற சமூக அக்கறையுடன் பல்வேறு நிகழ்வுகளை பல வருடங்களாக வெற்றிகரமாக தமிழால் இணைவோம் என்ற கொள்கையோடு நடத்திவருகிறது .


நமது தமிழ் மொழியின் சிறப்பு, இலக்கியம் படைப்புகளை கொண்டு சேர்க்கவும் , வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும் "தமிழ் சிட்டுக்கள்" என்ற மின்னிதழை வெளியிட்டுள்ளது .




# ஓவியம் மற்றும் வண்ணம் : இலட்சனா , மொன்றியல்

## வயது : 9 , வகுப்பு : 4





# பென்சில் ஓவியம் :
# வருண் ஆதர்ஷ்
# வகுப்பு : 6







வண்ணம் : தர்சன் கிருட்ணா
பஞ்சாட்சரம் ,2ém anné, École Jean Grou

# ஊர் சுத்தலாம் வாங்க!!!-வெக்பில்ட்(Wakefield).

எப்படா வெயில் காலம் வரும்னு காத்திருந்து வெயிலும் மழையும் கலந்ததா ஜூலை மாசத்துக்கு வந்துட்டோம். இப்போ சுத்திப்பார்க்க போகாம பின்ன எப்போ போக. மொன்றியல்க்கு பக்கமா சுத்திப்பார்க்க எங்க போலாம்னு இணையத்துல தேடி பாத்தீங்கன்னா பக்கத்துல இருக்குற எல்ல ஊரும் வெகேஷன் ஸ்பாட்ன்னு தான் சொல்லும்.

பாக்கக்கூடிய இடங்கள், பொழுதுபோக்கு, சாப்பாடு, மொழி, போக்கு வரத்துனு எல்லாத்தையும் வச்சு பாத்து நாங்க முடிவெடுத்தது தான் வெக்பில்ட் (Wakefield).

பெயரை பாத்ததும் ஆங்கில பெயரா இருக்கு அப்போ ஒண்டாரியோ ஆஹ் இருக்கும்னு நினைச்சுராதீங்க . நம்ம கியூபெக்குள்ள தான் இருக்கு

ஆனால் ஒண்டாரியோ எல்லை பக்கம் ஒட்டாவா நகர்ல இருந்து அரை மணிநேர தொலைவில இருக்கு. ஊரு மட்டும் சூப்பர் கிடையாது அதுக்கு போற வழியே தனி அழகு.

மொன்றியல்ல இருந்து இரண்டு வழியா வெக்பில்ட் போகலாம் ஒன்று ஒண்டாரியோ வழியான நெடுஞ்சாலை பாதை மற்றொன்று செயின்ட் லாரன்ஸ் நதியோரமான கியூபெக் சாலை. ஒரு பக்கம் செயின்ட் லாரன்ஸ் நதியோட அலை சத்தம் இன்னொரு பக்கம் உயர்ந்த மரங்கள் கொண்ட காடுகள்னு நடுவுல அந்த அமைதியான ரோட்ல சிறு குறு அழகிய பிரெஞ்சு ஊர்களகடந்து அந்த அமைதியான ரோட்ல போறதே ஒரு தனி சந்தோசம் தான்.

நாங்க கார் எடுத்துட்டு கூட்டநெரிசல்ல சிக்கிற கூடாதுனு விடியற்காலை ஆறு மணிக்கு கிளம்பிட்டோம்.



# ஊர் சுத்தலாம் வாங்க!!!-வெக்பில்ட்(Wakefield).

மொன்றியல் தாண்டுற வரைக்கும்த்தான் கூட்டம் எல்லாம் அதுக்கப்றம் ரோட்ல கார் பாக்குறதே அதிசயம் தான். ஒட்டாவா வரை. நெடுஞ்சாலைல சொல்ற வேகத்துல போனீங்கனா சுமார் ரெண்டு மணி நேரத்துல நீங்க போயிரலாம். ஒட்டாவா வரைக்கும் இருந்த இயற்கை எழில் கூட பத்தலன்னு சொன்னிங்கன்னா ஒட்டாவால இருந்து வெக்பில்ட் போற ரிவர்சைடு சாலை உங்கள நிச்சயம் கவர்ந்திடும்.

ஒரு பக்கம் கேட்நியூ, ஓடை இன்னொரு பக்கம் புல்வெளி மலைக்குன்றுகள்ன்னு மாறி மாறி வரும். இயற்கை காட்சி.அதே சாலையில் கொஞ்சம் நேரத்துகப்ரோம் சிறு சிறு தனி வீடுகள் தென்படும் அதன்பின் கம்பீரமான விக்டோரியன் . வீடுகள் காட்சியளிக்கும் அதவச்செ ஊர் வந்துசேந்தாச்சுனு தெரிஞ்சுக்குவீங்க கூகிள் வரைபடம் தேவையில்ல.

ஊருக்குள்ள நுழைஞ்ச அந்த நிமிஷம் நம்ம ஊரு ஹில் ஸ்டேஷன் தான் நியாபகம் வந்துச்சு என்னோட நியாபகத்துல வந்தது நம்ம கொடைக்கானல் ஓட ஏரிக்கரை சாலை தான் பிரிட்டிஷ் பங்களா அழகான குட்டி
கடைகள் சாக்லேட் கடைகள் ஆத்தோரமா நடக்குறதுக்கு கட்டிவிடப்பட்ட நடைமேடை என எல்லாம் அதத்தான் நியாபகப்படுத்துச்சு.

இதெல்லாம் ரசிச்சுகிட்ட போய் விசிட்டர் சென்டர்ல கார் நிறுத்திட்டு அவங்ககிட்ட போய் எதுலாம் திறந்து இருக்கு எதுலாம் பாக்கலாம்ன்னு கட்டாயம் கேளுங்க எந்த மொழி பிரச்சனையும் இல்ல ஆங்கிலத்துலயே பேசலாம்.

# ஊர் சுத்தலாம் வாங்க!!!-வெக்பில்ட்(Wakefield).

எல்ல விவரத்தையும் கேட்டுட்டு பொடிநடைய நடந்து உணவகம் போய் சாப்டுகிட்டே பண்ணுங்க.
நாங்க போனது கஃபே ஏர்லே பக்கா பிரெஞ்சு கஃபே ஆனா அங்க சாப்பிட்றவங்க வேலை பாக்குரவங்க எல்லோருமே செம்ம ஜாலியா எங்ககிட்ட ஆங்கிலத்துல பேசுனாங்க. அந்த உணவகத்துல திறந்தவெளில சாப்பிடும் வசதியும் இருந்துச்சு. அதனால நாங்க வாங்கி வெளிய உக்காந்து மலைகள் ஊரு ஆறு எல்லாம் சேர்ர அந்த காட்சிய ரசிச்சுகிட்டே சாப்பிட்டோம் அந்த காட்சி போதும் உங்களுக்கு பொழுது போறதே தெரியாது. முக்கியமான விஷயம் அந்த உணவகம் பத்தி நான் சொல்றத கேட்டுட்டு விலை அதிகம்னு நினைச்சுராதீங்க மொன்றியல விட கம்மி தான் விலை வாசிலாம்.

வெக்பில்ட்ல ஹைக்கிங் பண்ணலாம் படகு சவாரி போகலாம் அல்லது சைக்கிள் வாடகைக்கு எடுத்துட்டு சுற்றலாம் வானிலை சரியா இருந்த ஓடைல ஒரு குளியலக்கூட போடலாம். ஓடி ஆடி களைச்சு மதிய சாப்பாடுக்கும் சுற்றுலாவோட அடுத்த பகுதிக்கும் போலாம்.

அடுத்த நிறுத்தம் செல்சி வெக்பில்ட்ல இருந்து ஒட்டாவா போற பாதைல பாதி வழில இருக்கு கேட்நியூ பார்க் ஓட இரண்டாம் நுழைவுவாயிலும் அங்கதான் இருக்கு.

வெக்பில்டு போற பாதைல பாத்த காடு மலை ஆறு ஏரி எல்லாம் கேட்நியூ பார்க் ஓட பகுதி தான்.

செல்சி ஊர்ல கட்டாயம் சாப்பிட வேண்டிய இடம் பிஸ்காட்டி சி. பிரெஞ்சு ஸ்வீட் வகைகள் அண்ட் பீட்சா தான் அவங்க ஸ்பெசியலிட்டி. நம்ம கேட்ட பீட்சா அவங்க செய்யுறத நம்ம நேரடியா பாக்கலாம்.

# ஊர் சுத்தலாம் வாங்க!!!-வெக்பில்ட்(Wakefield).

இதுவும் மொன்றியல்ல நீங்க வாங்குற பீட்சாவும் ஏறத்தாழ ஒரே விலை தான் ஆனா உங்க கண்ணுமுன்னாடி செஞ்சு தாராங்க.


கேட்நியூ பார்க்ல எங்க போனும்னு விசிட்டர் சென்டர்ல பாத்து பேசிட்டு உணவகத்துலயே சாப்பிட்டு முடிச்சு அல்லது பார்சல் வாங்கிட்டு பார்க்குள்ள நடக்க ஆரம்பிச்சிருங்க ஆங்காங்கே டேபிள் இருக்கு நல்ல இயற்கை காட்சியோட இர்ருக்குற டேபிள் பாத்து உக்காந்து சாப்பிடுங்க.

கட்டாயமா மறக்காம ஒரு பாய் அல்லது தார்பாய் கொண்டுவாங்க. ஒரு குட்டி தூக்கம் கூட போடலாம் அடிக்குற காத்துக்கு. கேட்நியூ பார்க்லயும் மலையேற்றத்துல இருந்து படகு சவாரி நீச்சல் வரை பல வித பொழுது போக்கு இருக்கு. பார்க்ல சன் செட் பாத்துட்டு நெடுஞ்சாலைல ஏறுனீங்கனா இரவு சாப்பாடுக்கு வீட்டுக்கு வந்துவிடலாம்.





கட்டுரை :குமார் பிரபாகரன் , முதுகலை பட்டம் ,Concordia பல்கலைக்கழகம் மொன்றியல்



K.Badrinadh
Grade : 4
École Internationale des Aventuriers





# ஓவியம் மற்றும் வண்ணம்
# : மகதி மொன்றியல்






ஓவியம் மற்றும் வண்ணம் :
பாரத் பெருமாள் ,
Grade : 4
School : Gille Vigneault,
மொன்றியல்







Shriya Gopinath

Age - 12 years

# தக்காளி தோசை

வெள்ளை நிறத்தில் தோசை சாப்பிட்டு அலுத்துப்போன குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் கொஞ்சம் வித்தியாசமான முறையில் இந்த சிவப்பு நிற தக்காளி தோசையை ஒரு முறை சுட்டு தாருங்கள்.

கொஞ்சம் மசாலா வாசத்துடன் கமகமக்கும் இந்த தோசை நிச்சயம் எல்லோருக்கும் பிடிக்கும். இதற்கு அதிகமாக சிரமப்பட தேவையில்லை. தக்காளியும் நம் வீட்டில் இருக்கும் சில பொருட்களே போதும். வாங்க இந்த ரெசிபியை எப்படி செய்வதென்று பார்க்கலாம்.

தேவையான பொருட்கள் :
4 டம்ளர் இட்லி அரிசி , 1/4 டம்ளர் உளுந்து , 1 கரண்டி வெந்தயம் , காஞ்சா மிளகாய் , கறிவேப்பிலை, சீரகம், பெருங்காயம் , வெங்காயம் 1, தாககாளி 5.

செய்முறை:

2 அல்லது 3 மணிநேரம் ஒன்றாக ஊறவைத்த 4 டம்ளர் இட்லி அரிசி , 1/4 டம்ளர் உளுந்து , 1 கரண்டி வெந்தயம் ஆகியவற்றோடு காஞ்ச மிளகாய் , கறிவேப்பிலை, சீரகம், பெருங்காயம் , வெங்காயம் 1, தாககாளி 5 சேர்த்து அரைத்து எடுத்து கொள்ளவும்.



# தக்காளி தோசை

புளிக்க வைக்க தேவையில்லை . அதன் பின்பு தோசைக்கல்லை மிதமான தீயில் வைத்து, இந்த தோசையை வார்த்து நெய் அல்லது எண்ணெய் சேர்த்து மொறுமொறுவென சுட்டு எடுத்தால் சூப்பரான தக்காளி தோசை ஐந்தே நிமிடத்தில் தயார்.

ஏற்கனவே அரைத்த இட்லி அல்லது தோசை மாவுடனும் காஞ்ச மிளகாய் , கறிவேப்பிலை, சீரகம், பெருங்காயம் , வெங்காயம் 1, தாககாளி 5 சேர்த்து அரைத்து கலந்து தக்காளி தோசை செய்யலாம். ஆனால மேற்கண்ட அளவிற்கு புதிய தன்மையும் , மொறுமொறுப்பும் கிடைக்காது.

இந்த தோசைக்கு ஒரு நிமிடத்தில் ஒரு சட்னியை எப்படி செய்யலாம். ஒரு மிக்ஸி ஜாரில் பெரிய வெங்காயம் 1, தக்காளி பழம் 1, வர மிளகாய் 2, இஞ்சி ஒரு சிறிய துண்டு, புளி ஒரு பின்ச், பூண்டு பல் 2, கருவேப்பிலை, கொத்தமல்லி தழை புதினா, இதில் எது இருந்தாலும் அப்படியே பச்சையாக கொஞ்சம் இந்த சட்னியில் சேர்த்து தேவையான அளவு உப்பு வைத்து தண்ணீர் சேர்க்காமல் அப்படியே அரைத்து, தோசையுடன் சாப்பிடலாம்.

அட்டகாசமாக இருக்கும். தேங்காய் சட்னி விருப்பம் என்றால் அதையும் இதற்கு சைட் டிஷ் ஆக வைத்துக் கொள்ளலாம். உங்களுக்கு இந்த குறிப்பு பிடித்து இருந்தால் உடனடியாக உங்கள் வீட்டில் இருக்கும் தோசை மாவில் டக்குனு இந்த ரெசிபியை ட்ரை பண்ணி பாருங்க. நிச்சயமா உங்க வீட்ல இருக்கிற எல்லோருக்கும் பிடிக்கும்.

சந்தியா பிராணேஷ் , மொன்றியல்



# பாராசெய்லிங் Parasailing (வான் குடை மிதவை)

சென்ற மாதம் நாங்கள் புளோரிடா பயணம் மேற்கொண்டோம். எனக்கு ஒரு முறையேனும் பாராசெய்லிங் Parasailing (வான் குடை மிதவை) ல் பயணம் செய்ய வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. உங்களுக்கு பாராசெய்லிங் என்பது பற்றி தெரியாது என்றால் அது பற்றி நான் கூறுகிறேன்.

அது ஒரு நீர்நிலை சார்ந்த பொழுது போக்கு நிகழ்வு . அதில் அதி வேகமாக செல்ல கூடிய விசை (மோட்டார்) படகு உள்ளது.

குடை போன்ற அமைப்பில் நம்மை உட்கார செய்து பின் படகை வேகமாக செலுத்தும் போது காற்று நம்மை படகை விட்டு வெளியே தள்ளும்.

பாராச்சூட்/ குடை போன்ற அமைப்பு நம்மை நீரில் விழாமல் காற்றில் மிதக்க செய்கிறது. குடை அமைப்பின் மறுமுனை படகில் கட்டப்பட்டிருக்கும்.



சூரிய அஸ்தமத்தை பார்க்க நாங்கள் புளோரிடாவின் கிளியர் வாட்டர் பீச் என்ற புகழ் பெற்ற கடற்கரைக்கு சென்றோம். அங்கே பாரா செய்லிங் கடைக்கு சென்றோம். எங்களது முறை வருவதற்குள் நாங்கள் எங்கள் நீச்சல் உடைக்கு மாறினோம்.

கடைக்காரர் இப்பயணம் கடலின் மேல் சுமார் 500 அடி உயரம் போகும். (தரையில் இருந்து 1000 அடி). இதை கேட்டதும் எனக்கு சிறிது பயம் ஏற்பட்டது.

# பாராசெய்லிங் Parasailing (வான் குடை மிதவை)



இருந்தாலும் இதை செய்ய வேண்டும் என்ற மனதைரியத்தோடு பயணத்திற்கு தயார் ஆனோம்.

எங்களது முறை வந்தது. எங்கள் விசைப்படையில் மொத்தம் பத்து நபர்கள் இருந்தனர்.

அதில் இருவர் பாரா செய்லிங் பொறுப்பாளர்கள். ஒவ்வொரு நபர்கள் முறை மாறும் போதும் எனக்குள் பயம் ஏறிக் கொண்டே இருந்தது. அதற்கு காரணம் எனக்கு உயரம் என்றால் பயம், என்னுடன் இருந்த என் தோழி என்னை சமாதானப்படுத்தி எனக்கு ஆறுதல் கூறினாள்.

என் முறை வந்தது. அவர்கள் கொடுத்த உயிர் கவச ஆடையை அணிந்து கொண்டு என் உறவினர் (அண்ணன்) அருகில் அமர்ந்தேன்.

நான் என் தங்கை அண்ணன் மூவரும் பாராச்சூட் இருந்த கம்பியில் கயிறு மூலம் இணைக்கப்பட்டோம். அந்த பொறுப்பாளர் எங்களுக்கு கீழே/ மேலே செல்லும்போது கைகளை எப்படி வைத்துக்கொள்ள வேண்டும் என்று விளக்கினார்.

அதன் பிறகு படகின் வேகத்தை அதிகப்படுத்தினார்.

மற்றொரு பொறுப்பாளர். பாரா செய்லிங் குடை அமைப்பு காற்றில் மேலே மிதக்க தொடங்கியது.

# பாராசெய்லிங் Parasailing (வான் குடை மிதவை)

அப்போது அத்துடன் பிணைக்கப்பட்ட நாங்களும் மெதுவாக மேலே மிதக்க ஆரம்பித்தோம்.

படகிலிருந்து கயிற்றை மெதுவாக விடத் தொடங்கினர் சிறிது நேரத்தில் நாங்கள் படகிலிருந்து தூரமாக மற்றும் மேலே மிதக்க தொடங்கினோம்.

சில நிமிடங்களில் 500 அடி அடைந்தோம். எங்கு திரும்பினாலும் கடல், நாங்கள் கடலால் சூழ பட்டோம். வெகு தொலைவில் என்னால் நாங்கள் வந்த கடற்கரையை காண முடிந்தது. மேலே ஒரே அமைதி அது என்னை பயமுறுத்தவில்லை படகிலிருந்து அந்த பொறுப்பாளர் கயிற்றை ஆட்டினார் .

அதனால் நாங்களும் அந்த குடை அமைப்பும் மேலும் கீழுமாக ஆடினோம். அதனால் எனக்கு சிறிது பயம் இருந்தத. இருந்தும், அதில் ரோலர் கோஸ்டர் போல் பயம் இல்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு படகில் இருந்த உருளை, கயிற்றை இழுக்க ஆரம்பித்ததும் நாங்கள் கீழே வந்தோம். அப்பொழுது படகின் வேகத்தை குறைத்தார் .

படகோட்டி. அதனால் நாங்கள் கடலில் மூழ்கும் நிலை ஏற்பட்டது அடுத்த வினாடி படகின் வேகத்தை அதிகப்படுத்தினார். அதனால் நாங்கள் வந்தோம். உடல் முழுவதும் நனைந்தது. மேலும் கடல் நீர் என் வாயிலும் கண்ணிலும் சென்றதும் சிறிது கண் எரிச்சல் ஏற்பட்டது.

பிறகு ஒரு வழியாக கீழிறங்கி நாங்கள் படகை அடைந்தோம். இந்த அனுபவம் எனக்கு பயம் கலந்த மகிழ்ச்சியை அளித்தது. நான் பறப்பதைப் போல உணர்ந்தேன்.

# பாராசெய்லிங் Parasailing (வான் குடை மிதவை)

இந்த சுற்றுலா எனக்கு மிகுந்த சந்தோஷங்களை தந்தது. மேலும் இது போன்ற சாகச பொழுதுப் போக்கு அதிகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

அனுபவ கட்டுரை: சஹானா திருகொண்டா

வான்குடை (பாராசூட், parachute) வளிமண்டலத்தில் நகரும் ஒரு பொருளின் வேகத்தை பின்னிழு விசையை உருவாக்கிக் குறைக்கப் பயன்படும் ஒரு கருவி. வான்குடைகள் மெலிதான ஆனால் உறுதியான பொருட்களால் செய்யப்படுகின்றன. முன்னர் பட்டினால் செய்யப்பட்டன, இப்போது நைலான் செயற்கை இழையினால் செய்யப்படுகின்றன. வளிமண்டலத்தில் விழுந்து கொண்டிருக்கும் ஒரு பொருளின் இறுதி செங்குத்து திசைவேகத்தினை (Terminal Vertical Velocity) குறைந்தபட்சம் 75 சதவிகிதம் குறைக்கக்கூடிய கருவிகள் மட்டுமே வான்குடைகளாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

பாராசூட் என்ற சொல் “பாரா” மற்றும் ”சூட்” என்ற இரு பிரெஞ்சு சொற்களிலிருந்து தோன்றியது. “பாரா” என்றால் “தயாராகுதல்” என்று பொருள்; “சூட்” என்றால் ”விழு” என்று பொருள். வான்குடைகள் மக்கள், சரக்குகள், உணவு, வெடிகுண்டுகள் என பலதரப்பட்ட பொருட்களை வான்வெளியிலிருந்து பூமிக்குக் கொண்டு வர பயன்படுத்தப்படுகின்றன. மிதவை வான்குடைகள் (drogue parachutes) மீள்விண்கலம் போன்ற வானூர்திகள் தரையிறங்கும் போது பக்கவாட்டு முடுக்கத்தைக் குறைக்க பயன்படுகின்றன.




ஓவியம் மற்றும் வண்ணம் :
ரியா ஸ்ரீ திருக்கொண்டா
மொன்றியல்



# மாண்ட்ரியால் : திரும்பவும் பார்க்க நினைக்கிறேன்

பேரா.அ.ராமசாமி



க்யூபெக்கிலிருக்கும் சிட்டாடல் கோட்டையை அப்படித்தான் மாற்றியிருக்கிறார்கள். மேலே போகும்பாதை மலைப்பாதி.



அதை ஒருவழிப்பாதையாக அமைத்து முழுமையும் கவனமாகப் போகவேண்டிய நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். திருப்பங்களில் மட்டுமே வண்டிகள் விலகும்படியான அமைப்பு.

சாலைக்குறியீடுகள் மாறிக் கொண்டே இருக்கின்றன. எதிரே வரும் வாகனத்திற்காக வழிவிட்டு நின்றுநின்று மேலே ஏறவேண்டும். அப்படி ஏறுவதிலேயே ஒரு ராணுவத்தன்மை உருவாக்கப்படுகிறது. மலைக்கோட்டைக்குள் ராணுவத் தளவாடங்களும் ராணுவ அதிகாரிகளின் அலுவலகங்களும் இருக்கின்றன. நெப்போலியன் காலத்தில் உருவாக்கப்பெற்ற பிரெஞ்சுப் படைப்பிரிவு பாதுகாப்பாகத் தங்கிய இடம். இப்போதும் முழுமையாகப்

பிரெஞ்சுப் படைப்பிரிவொன்றை வைத்திருக்கிறார்கள். அந்த வரலாற்றை நினைவுபடுத்தும் அருங்காட்சிக்கூடங்கள் இருக்கின்றன.

கனடியப் பணத்தில் 12 டாலர் வாங்கிக்கொண்டு ஒருமணி நேரம் சுற்றிக்காட்ட இரண்டு பெண்கள் உடன் வருகிறார்கள். செஞ்சட்டையில் வரும் அந்தப் பெண்களில் பழைய பிரெஞ்சுப் படைச்சின்னம் இருக்கிறது. ஒருத்தி பிரெஞ்சில் சொல்வதை இன்னொருத்தி ஆங்கிலத்தில் சொல்கிறாள்.



சில இடங்களில் ஆங்கிலம் முந்திக்கொண்டால் பிரெஞ்சு தொடர்கிறது. பொறுமை இருந்து அவர்களின் பேச்சையும் சிரிப்பையும் கேட்டுக்கொண்டே நின்றால் சுற்றியிருப்பனவற்றைப் பார்க்காமல் விட்டுவிடுவோம்.

ஒருவிதக் கதைசொல்லும் பாணிக்குள் இருக்கும் பாவனைகளும் சிரிப்பும் நடிப்பு கற்ற நங்கைகளோ என்று நினைக்கத்தோன்றுவது எனக்குமட்டும் தானாவென்று தெரியவில்லை.


கோட்டையின் ஒருமூலையில் இருக்கும் பீரங்கி வரிசைகளுக்குப் பக்கத்தில் நின்று புகைப்படம் எடுத்துக்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது. அப்படி எடுக்கப்படும் படத்தில் பெரும்படகுகள் செல்லும் புனித லாரன்ஸ் நதியும் அதன் கரையில் நிற்கும் சிறுபடகுகளும் அடுக்கடுக்கான கட்டடங்களும் பதிவாகிவிடும்.

அங்கிருந்தே தெரியும் பழைய நகரமும், ஆற்றுக்கு மறுகரையிலிருக்கும் ஊருமாக விரியும் காட்சி காணவேண்டிய ஒன்று.

கோட்டையின் கட்டடங்கள் ஒவ்வொன்றுக்கும் உள்ளே ஆயுதங்களின் வரிசைகளும் ராணுவமுகாம்களின் மாதிரிகளும் இருக்கின்றன. ஒரு அரங்கில் க்யூபெக் நகரத்திலிருந்து போருக்குச் சென்ற மரித்தவர்களின் பெயர்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் பெற்ற பட்டங்கள் இருக்கின்றன.

படைவீரர்களின் ஆடைகளும் ஆடைகளில் அணியப்படும் போரடையாளச்சின்னங்களும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. கோட்டையின் மையத்தில் சிறுகுன்றுபோலக் கருங்குவியலொன்று கிடந்தது.

அது பனிக்குவியல் எனச் சொன்னபோது ஆச்சரியமாக இருந்தது. பனிக்காலம் முடிந்து மூன்று மாதங்கள் முடிந்தபின்னும் பனி உருகாமல் தூசியிட்டுப் பாதுகாக்கிறார்கள்.




அப்படிப்பாதுகாக்கப்படும் பனிக்குவியல்கூட ஆயுதத்தின் ஒருவகையாகப் பயன்பட்டுள்ளது. இந்த ஆண்டு வரும் ஜூலை 10 இல் தொடங்கும் கனடா பயணம் ஒருமாத காலம் நீடிக்கும். அமெரிக்காவில் இருந்த மகன் குடும்பம் இப்போது ஒட்டாவாவில். அதனால் நான் பார்க்கவிரும்பிய மாண்ட்ரியால் நகரில் சில நாட்கள் தங்கும் ஆவலோடு உள்ளேன்.



இலக்கியம், நாடகம், சினிமா ஆகியவற்றைக் கற்பித்த பேராசிரியர் என்ற வகையில் அங்கிருக்கும் தமிழர்களோடு உரையாடும் வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன்.

மொன்றியல் பயண
அனுபவக் கட்டுரை



ஓவியம் : தீக்சான பிரியா மொன்றியல்



# "அபூர்வ மனிதர்கள்" சிறுகதை தொகுப்பு - வாசிப்பனுபவம்

வாசிப்பை நேசிக்கும் தமிழன்பர்கள் அனைவருக்கும் வணக்கம். இதைத் தான் வாசிக்க வேண்டும், ஒரு நூலை வாசித்து முடித்துவிட்டுதான் அடுத்த நூலை வாசிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் எல்லாம் எனக்கு இல்லை. கிடைக்கும் எல்லாவற்றையும் எப்போதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ அப்போதெல்லாம் வாசித்துக் கொண்டிருக்கும் பழக்கமுடையவள்.அண்மையில் அப்படி கையில் கிடைத்த ஒரு புத்தகம் தான் தி ஜானகிராமன் எழுதி ஐந்திணை பதிப்பகம் வெளியிட்ட "அபூர்வ மனிதர்கள்" சிறுகதை தொகுப்பு.

இந்த புத்தகத்தை பற்றிய ஒரு சிறப்பான செய்தி என்னவென்றால் இதுதான் தி ஜாவின் கடைசி நூல் என்று முன் இதற்கு முன்னுரை எழுதிய திருப்பூர் கிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடுகின்றார்."முந்திரிப்பருப்பு குவியல்" என்ற தலைப்பில் மிக அழகான, ஆழமான ஒரு முன்னுரையை திருப்பூர் கிருஷ்ணன் அவர்கள் இந்நூலுக்கு வழங்கியுள்ளார்.

இந்நூலில் மொத்தம் 15 கதைகள் சிறுகதைகள் உள்ளன.இது இலக்கிய சிந்தனை பரிசு பெற்ற ஒரு நூல்.இந்த நூல் முழுவதும் நகைச்சுவை உணர்வு ததும்ப தி ஜாவின் இமாலய எழுத்து மலைக்க வைக்கிறது.

1.பூட்டுக்கள்
2.பாரிமுனை பட்டினபாக்கம்
3.கம்ப்ளைன்ட்
4வேதாந்தியும் உப்பிலியும்
5.மக்களை ஈர்த்த மகராசர்
6.நாதரட்சகர்

# "அபூர்வ மனிதர்கள்" சிறுகதை தொகுப்பு - வாசிப்பனுபவம்

7.மிஸஸ் மாதங்கி
8.மிஸ்டர் கோடு கோடு கோடு
9.பத்து செட்டி
10.உதட்டுக்கார பையன்
11.கைகாட்டி
12.விஞ்ஞான வெட்டியானும் ஞானவெட்டியானும்
13. 23 இ பேருந்தில்
14.காவலுக்கு
15..ப்பா

நிச்சயமாக இதில் உள்ள ஒவ்வொரு கதையும் அபூர்வமான ஆச்சரியமான அழகான ஆழமான கதைகள்தான் பூட்டில் தொடங்கிய இப்புத்தகம் பூட்டிலேயே முடிகிறது.

உரையாடல் வழியாகவே காட்சிப் பின்புலம், இடம், மனிதர்களின் சூழ்நிலை, உறவுகள் எல்லாவற்றையும் போற போக்கில் பதிவிட்டு செல்கிறார்.

இதில் எனக்கு மிகவும் நெஞ்சைத் தொட்ட கதைகள் என்று சொன்னால் "பத்து செட்டி" என்ற கதை. இது எனக்கு ஒரு செய்தியை சொல்லிக் கொடுப்பது போல தான் எனக்கு தெரிந்தது. நமக்கு வர வேண்டிய சில செய்திகள் எதன் மூலமாகவும் யார் மூலமாகவோ எப்படியோ நமக்கு வந்து சேரும்.அதை நாம் உன்னித்து அவதானித்தால் அது நமக்காகச் சொல்லப்பட்ட ஒரு விடயம் என்று தோன்றும்.அப்படித்தான் இந்த "பத்து செட்டி" என்ற சிறுகதையை படிக்கும் ஒரு வாய்ப்பே எனக்கு ஒரு செய்தியாகத்தான் இருந்தது.

# "அபூர்வ மனிதர்கள்" சிறுகதை தொகுப்பு - வாசிப்பனுபவம்

இந்த கதையில குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் நன்றாக வாழ்ந்து தொடர்ந்து அடிபட்டு நொடித்து அதலபாதாளத்திற்கு சென்ற ஒருவர் மீண்ட ஒரு கதையை தான் இந்த பத்து செட்டி கூறுகிறது.ஒரு தலைப்பு ஒவ்வொன்றுமே மிகவும் ஈர்க்கக் கூடியதாக இருந்தது தி.ஜாவின் வின் வரிகளை இங்கே மேற்கோள் காட்ட விரும்புகிறேன். இது எனக்காக சொல்லப்பட்ட நான் பின்பற்ற வேண்டும் என்று எனக்காகவே சொல்லப்பட்ட விடயமாக நான் எண்ணிக் கொள்கிறேன். ஒருவரும் எண்ணிக் கொள்ளலாம். அது அவர் அவரைப் பொறுத்தது.

"உன்கிட்ட 10 அணா அதுல ஒண்ணு சாமிக்கு அல்லது ஏழைக்கு அல்லது நோயாளிகளுக்கு கொடுக்கணும் பத்து ரூபாய் ஒரு ரூபா,பத்து சட்டைக்கு என்ற ஒரு சட்டை,10 வீடுன்னா ஒரு வீடு, 10 மாங்கானா ஒரு மாங்கா பத்த ஆப்பிளில் ஒரு அப்பிள் பத்தில் ஒன்று கொடு. ஆயிரம் ஆயிரமாய் திரும்பி வரும்" .

ஆங்கிலத்தில் எழுதப்பட்டு விற்பனையில் சக்கைபோடு போடும் பல நூல்கள் "ரகசியம்"," ஏழை தந்தை பணக்கார தந்தை" போன்ற பல்வேறு நூல்களில் சொல்லப்பட்ட விடயங்கள் தான் இது.

இந்த பிரபஞ்சத்திற்கு நீ ஒரு விடயத்தை நல்ல விடயத்தை கொடுத்தால் அது பத்து மடங்காக திரும்பி உனக்கு வரும் என்று அவர்கள் ஆங்கிலத்தில் சொல்கிறார்கள். இதையேதான் 1989இல் எழுதப்பட்ட தி ஜாவின் "பத்து செட்டி" சிறுகதை அழுத்தமாக பதிவு செய்கிறது.

# "அபூர்வ மனிதர்கள்" சிறுகதை தொகுப்பு - வாசிப்பனுபவம்

அடுத்ததாக நான் மிகவும் ஆச்சரியமான ஒரு கதையைப் படித்தேன். அதுதான் "உதட்டுக்கார பையன் ". இந்த ஊரடங்கு சமயத்தில் மதிப்பிற்குரிய எழுத்தாளர் எஸ்ரா அவர்களின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட 126 குறுங்கதைகள் தொடர்ந்து நான் வாசித்த பொழுது அதில் அவர் இப்படித்தான் ஒவ்வொரு குறுங்கதைக்கும் இட்டத் தலைப்புகள் எல்லாம் மிகவும் வசீகரமானதாக இருக்கும். "சொற்கள் இல்லாத புத்தகம்","கனவுகளின் கணக்கெடுப்பு" போன்றவை .

இப்படி வித்தியாசமாக தலைப்புகள் இடப்பட்டிருக்கும் அந்த குறுங்கதைகள் அந்த கதைகளில் வரும் அந்த விடயங்கள் கூட நாம் இதுவரை சிந்திக்காத ஒரு புது உலகத்தை புது சிந்தனையை புது கதவைத் திறப்பது போல இருக்கும். இதற்கு முன்னோடியாக தி ஜா அப்பொழுதே இந்த "உதட்டுக்கார பையன்" என்ற இந்த சிறுகதை எழுதியிருக்கிறார் என்று தோன்றியது.

இந்த சிறுகதை இன்றும் கூட அப்படியே பொருந்துகிறது. அதில் சொல்லப்படும் இது விடயம் என்னவென்றால் ஒரு மாதர் சங்கத்தின் வெளியே ஒரு ஐஐடி யில் ல் படித்த ஒரு மாணவன் சிரிக்கும் உதட்டு பொம்மைகளை விற்பனை செய்வான்.அவன் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகளின் மனைவிகள் கூடியிருக்கும் மாதர் சங்கத்தின் முன் விற்பனை செய்யும் காரணம். வசிக்கும் பொது இலகுவாக நமக்குள் விளங்கும். அவர்கள் ஒவ்வொருவரிடமும் "இந்த சிரிக்கும் உதட்டை வாங்கிக்கொண்டு போய் உங்கள் கணவர்களின் உதடுகளில் பொருத்தி விடுங்கள். அவர்கள் அவர்களைத் தேடி வரும் ஏழை எளிய மக்களிடம் புன்னகை காட்டட்டும் .

# "அபூர்வ மனிதர்கள்" சிறுகதை தொகுப்பு - வாசிப்பனுபவம்






இதன் மூலம் உங்கள் குடும்பத்திற்க்கு வரும் பாவங்கள், சாபங்கள் குறையும்" என்பது போல சொல்லுவதாக இந்த கதை அமைந்திருக்கும்.
எத்தனை ஒரு பெரிய விடயம். நாம் எல்லா அரசு அலுவலகங்களிலும் கடுகடுத்தும் சிடுசிடுத்தும் எறிந்து விழுந்து இன்று போய் நாளை வா என்று ஒவ்வொரு நாளும் சொல்லும் அரசு அதிகாரிகளை சந்தித்து இருக்கிறோம். அதைத்தான் நகைச்சுவையாகவும் கேலியாகவும் தன்னுடைய அற்புதமான எழுத்தில் தி ஜா அவர்கள் வடித்திருக்கிறார்கள்.

இதன் மறுபதிப்பு நூல் வந்திருக்கிறதா என்று எனக்கு தெரியவில்லை.நான் படித்தது ஐந்திணை பதிப்பகத்தால் 1989 அக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட இரண்டாம் பதிப்பு. வாய்ப்பு இருந்தால் அபூர்வ மனிதர்களை வாசித்துப் பாருங்கள் நிச்சயமாக உங்களுக்குள் அபூர்வமான உணர்வுகளும் புரிதல்களும் சிந்தனைகளும் வெளிப்படும். நன்றி.

இளவரசி இளங்கோவன்

மொன்றியல் சிறார்கள் மற்றும் கலைஞர்களின் பல படைப்புகளை இணைத்து மின்னிதழை வெளியிடுகிறோம்.பல உள்ளூர் படைப்பாளர்களை கொண்டு வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

எப்பொழுதும் போல் தங்களின் கருத்துகளை ஆவலுடன் எதிர்நோக்குகிறோம். மற்றும் தங்களின் நட்பு வட்டத்திற்கும் கொண்டு செல்ல உதவுங்கள்.

மொன்றியல் மற்றும் கியூபெக் பகுதிகளில் உள்ள அனைவரும் ஓவியம், கவிதை, கட்டுரை, புத்தக விமர்சனம், சினிமா விமர்சனம், சமையல் குறிப்பு, கை வைத்தியம் மருத்துவக்குறிப்பு, பிள்ளை வளர்ப்பு, சுற்றுலா தளங்கள் என எந்தவொரு படைப்பையும் emagazine@tamilagamquebec.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

தமிழ்ச்சிட்டுக்கள் மின்னிதழை குறித்த தங்களது கருத்துக்களை emagazine@tamilagamquebec.org என்ற மின்னஞ்சல் முகவரியில் தெரிவிக்கவும்
நன்றி

தமிழகம் கியூபெக் கலாச்சாரச்சங்கம் மொன்றியல்

தமிழ்ச்சிட்டுக்கள் ஆசியர் குழு
இளவரசி இளங்கோவன் (514-512-6992)
பிரியதர்ஷினி ஸ்ரீனிவாசன் (514-824-5052)

மின்னஞ்சல்-info@tamilagamquebec.org
முகநூல்- https://www.facebook.com/tamilagamquebec
இணையதளம் -www.tamilagamquebec.org